1994 மார்ச் 19]

57—

கோவை டாக்டர் அம்பேத்கர் ஆதி திராவிட மாணவர்கள் விடுதியைப் பழுதுபார்த்தல்.

*20095—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் ஆதி திராவிட மாணவர்கள் விடுதி பழுதடைந்து, அடிப்படை வசதி கள் போதுமான அளவில் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுதுபார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பழுது பார்க்கும் பணிகள் கடந்த ஆண்டே செய்து முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே கூட அந்த விடுதி மாணவர்களுடன் தொடர்பு கொண்டேன். கழிப்பறையிலே தண்ணீர் இல்லாத காரணத்தினால், அந்த மாணவர்கள் விடுதிக்கு அருகிலே உள்ள சிறைச்சாலை வளாகத்தை திறந்த வெளி கழிப்பிடமாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மின்சார ஒயர்கள் எல்லாம் பழுதடைந்து தொங்கிக் கொண்டிருக் கின்றன. அது அபாயகரமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த விடுதிக்கு சுண்ணாம்பு அடித்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு அறைகளுக்கு சுண் ணாம்பு அடிக்கப்பட்டிருக்கிறதேயொழிய மீதி அறைகளுக்கு எல்லாம் சுண்ணாம்பு அடிக்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்து இந்த விடுதியிலே பொறி யியல் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் தங்கிப் படிக் கின்றார்கள். 278 பேர் அங்கே தங்கிப் படிக்கின்றார்கள். அந்த மாணவர்களுக்கு இரண்டு மேசை மட்டும்தான் இருக் கிறது. நாற்காலியே கிடையாது என்பதையும் நான் இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே இந்த விடுதிக்கு....

[1994 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. லட்சுமணன் : கழிப்பறை அடிப்படை வசதி அல்லவா, அதனால்தான் சொல்கிறேன். இங்கே நூலகம் இல்லை, வாட்ச்மேன் கிடையாது, சுவீப்பர் கிடையாது. எனவே, இந்த அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால் இந்த விடுதி, மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற அளவுக்கு எந்த வசதிகளும் இல்லாமல் உள்ளதால் அந்த மாணவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை நான் மீண்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, இந்த அரசு அடிப்படை வசதிகளை அளிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரி மாணவர்கள் விடுதியில் கழிப்பிட அறைகள் பழுதடைந்து இருந்தது, மின்கம்பிகள் பூராவும் பழுதடைந்து இருந்தது, மின் விசிறிகள் பழுதடைந்து இருந்தது, தண்ணீர் குழாய் மீட்டர் புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தது, சுவரில் விரிசல்கள், மேல் தளம் பூச்சு வேலைகள், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கசிவைப் போக்குகின்ற பணி, போன்றவைகளை எல்லாம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு சிறுசேமிப்பு ஊக்குவிப்பு தொகையிலிருந்து செலவு செய்து நிறைவு செய்யப்பட்டதாக எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு நமது சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்வியின் அடிப்படையில் இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மேலும் தங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லையென்றால் அவர்கள் எழுத்து மூலம் கொடுத்தால் அதற்கு நிதி நிலையை உயர்த்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை என்பதை இன்று காலையிலே அந்த மாணவர்கள் மிகவும் வருத்தத்துடன் கூறினார்கள். எனவே இனிமேலாவது அந்த அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கோவை மாவட்ட ஆட்சியர் தனது சிறுசேமிப்பு ஊக்கத் தொகையிலிருந்து செய்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவல் அவருக்குத் திருப்திஅளிக்கவில்லை என்றால், எழுத்து மூலமாகக் கொடுத்தால்

1994 மார்ச் 19]

நானே நேரிடையாகச் சென்று பார்வையிட்டு, அந்த மாணவர்களை விசாரித்து, அதற்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் முறையீடு செய்து கோருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 58, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

58—

இந்து சமய அறநிலைய வாரியத் தலைமை அலுவலகத்தை திருச்சிக்கு மாற்றுதல்

*11061—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் மையமாக இருப்பதால், இந்து சமய அறநிலைய வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னையிலிருப்பதை திருச்சிக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பெரும்பாலான உறுப்பினர்கள் சென்னையில் உள்ளதால் வாரியத்தின் நிர்வாக நலனுக்காக அதன் தலைமையகம் சென்னையில் இருப்பது அவசியம். அதனைத் திருச்சிக்கு மாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ்நாடு தலைநகரத்தையே திருச்சிக்கு கொண்டு செல்ல நினைத்தார். அவர் விட்டுச் சென்ற கொள்கையின்படி, தமிழகத்திலுள்ள மையப் பகுதியான திருச்சிக்கு இந்த நிர்வாகத்தைக் கொண்டு செல்ல அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்,